1970 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப காலத்தில், இந்தத் திட்டத்தைப் படிப்படியாக அமல் படுத்துவதற்காகக் கட்டடங்கள் கட்ட ஆரம்பிக்கப்பட்டன. தேசிய நெருக்கடியின்போது இத்திட்டம் நிறுத்தப்பட்டு, பிறகு சில களில் வீடுகள் கட்டப்பட்டன. 1970–71-ல் இதிலுள்ள சில விதிகளைத் தளர்த்தி வீடுகள் கட்ட முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டது. இந்த ஆண்டில் 168 வீடுகளைக் கட்ட திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் படிப்படியாக இத்திட்டம் அமலாக்கப் படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, கிராம சேவக்குகளுக்காக வேண்டி இப்போது கட்டப்பட்டிருக்கிற வீடு களிலே எவ்வளவு பேர்கள் குடியிருக்கிறார்கள்? குறைந்த பட்சம் 25 சதவீதம் பேர்கள் இந்த வீடுகள் குடியிருப்பதற்கு லாயக்கு இல்லாத அளவுக்கு இருக்கின்றன என்று சொல்வது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அமைச்சர் அவர்கள் உடனடியாகப் பார்வையிட்டு, அதற்கான காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, கட்டப் பட்ட வீடுகளில் எல்லாம் குடியிருக்கிறார்கள். எத்தனை வீடுகளில் குடித்தனம் இல்லை, எவ்வளவு வீடுகள் தகுதியற்ற நிலையில் இருக் கின்றன என்ற விபரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

கதர் துறை பணியாளர்கள் சங்கம்

* 254 வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக கதர் கிராமத் தொழில் வாரியத்திலுள்ள கதர்த் துறைப் பணியாளர்கள் சங்கம் ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அது எவ்வாறு செயல்படுகின்றது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) வாரிய ஊழியர்களின் பெரும்பாலான குறைகள் முறைப் படி நீக்கப்பட்டுள்ளன, எனவே ஊழியர்கள் சங்கத்தில் அதிகம் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை.

North Arcot District Co-operative Supply and Marketing Society

* 255 Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether some irregularities were detected in the matter of distribution of chemical fertilizers by the Secretary of the North Arcot District Co-operative Supply and Marketing Society Limited, in the year 1969;

(*b*) whether the irregularities were reported by the President of the Society to the District Collector, Registrar of Co-operative Societies and other authorities; and

(*c*) if so, what action has been taken against the Secretary?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) சங்கத் தலைவர் 8—4—1969 அன்று வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில், சங்கச் செயலாளர், அரசின் இரசாயன உரச்சேமிப்பிலிருந்து உரம் வழங்கப்பட்டதில் சில முறைகேடான செயல்களைப்பற்றிக் குற்றம் சாட்டியுள்ளார்.

(இ) இக்கடிதத்தின் நகல் ஒன்று கூட்டுறவுப் பதிவாளரால் பெறப்பட்டது.

(உ) இது குறித்து ஆராய்ந்து அறிந்தவுடன், நடவடிக்கை எடுக்கத் தேவையில்லையென்று கூட்டுறவுப் பதிவாளர் கருதினர். எனவே, நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

திரு. கே. விநயகம்: தலைவர் அவர்களே, சங்கத் தலைவர் ஒரு புகார் செய்தாரே, அந்தப் புகாரிலே எந்த அளவுக்கு உரத்தைப் பாழாக்கினர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா? அதுமாதிரி நஷ்டம் ஏற்படவில்லையென்ற அடிப்படையை வைத்து அதிகாரி முடிவுக்கு வந்தாரா? வழக்கு மன்றத்திலே போய் வழக்குப் போட்டதன் விளைவாக அதிகாரிகளைக் காப்பாற்றுவதற்காக இந்த முடிவுக்கு வந்தாரா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தின் தலைவர் செய்த குற்றச்சாட்டு செயலாளர் மீது. செயலாளர் ரசாயன உர விற்பனையில் 59 டன்னை கையிருப்பில் வைத்துக்கொண்டதாகக் குற்றஞ்சாட்டி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் கூட்டுறவுப் பதிவாளருக்கும் அனுப்பப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் தன் ஆணையின் கீழ் தான் கையிருப்பு வைத்துக்கொள்ளப்பட்டதாகப் பதில் அனுப்பி விட்டதால், செயலாளர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: செயலாளர் மீது புகார் செய்த சங்கத் தலைவர் மீது என்ன என்ன புகார்கள்—ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன? செயலாளர் தமக்கு அனுசரணையாக இருக்க மறுத்த காரணத்தினால்தான் இந்த மாதிரியாக பொய்யாகக் குற்றஞ் சாட்டினர் என்பது உண்மையா? இந்தத் தலைவர் மீது பொய் யாகக் குற்றஞ்சாட்டியதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கு விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் கொடுக்கிறேன்.

திரு. டி. மார்டின்: இந்தக் குற்றத்தைச் செய்த தலைவர் மீது கூட்டுறவுப் பதிவாளர் நடவடிக்கை எடுத்துக்கொண்டாரா? அல்லது அந்தத் துறையை வகிக்கின்ற அமைச்சரின் முடிவுப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: நமது கூட்டுறவுச் சட்டத்தின் 72-வது விதிப்படி அந்த முடிவை எடுக்க வேண்டியது கூட்டுறவுத் துறை பதிவாளரே தவிர அமைச்சர் இல்லை என்பதை அந்த வழக்கறிஞருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1970 செப்டம்பர் 5]

திரு. கே. விநாயகம்: சங்கத் தலைவர் பொய்யாகக் குற்றஞ் சாட்டினார்களா, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பது எல்லாம் வேறு விஷயம். சங்கத் தலைவர் சொன்னதைப்போல செயலாளர் நடக்கவில்லை ஏன்பதற்கு ரெக்கார்டு பூர்வமாக ஆதாரம் இருந்தால் அதைப் படிக்கவேண்டும். ஆதாரம் இல்லாது சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எவ்வாறு பதில் அளிக்க வேண்டும் என்பதற்கு அமைச்சருக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் முன்பே சொன்னபடி, செயலாளர், ரசாயன உர விற்பனையில் 59 டன் கையிருப்பு வைத்துக் கொண்டது, தம்முடைய ஆணைப்படிதான் என்று மாவட்ட ஆட்சியாளர் பதில் அளித்திருப்பதனால், நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால் மாவட்ட ஆட்சியாளர் மீதுதான் எடுக்க வேண்டுமே தவிர, செயலாளர் மீது அல்ல.

அலுவலர் கூட்டுறவுப் பண்டகசாலை, திருமயம்

*256 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயத்தில் அமைந்திருந்த அலுவலர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூடப்பட்டுள்ளதின் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: திருமயம் அரசு ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலை 1960-இல் இருந்து தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. 23—9—1967-இல் முழுக்க செயல்படும் நிலை அற்றதாகிவிட்டது. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 85-வது பிரிவின் பிரகாரம் அந்தப் பண்டகசாலையை மூடிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புலவர் பொ. பொன்னம்பலம்: திருமயம் அரசு ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலையை மூடிவிடுவதற்கான காரணங்களை இந்த அரசு நன்கு ஆய்ந்ததா? அந்தக் காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் முதலிலேயே சொன்னபடி 1960-இல் இருந்தே தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. 23—9—1967 அன்றைய நிலவரப்படி சங்கத்தின் சொத்து நிலவரங்களோடு பார்க்கிறபோது ரூ. 9,683-60 நட்டம் காணப்பட்டது. இப்படி அதுவே செயலற்றதாகிவிட்ட காரணத்தினால் மூடிவிட உத்தரவிடப்பட்டது.

Sri Kandaswami Temple Devasthanam

*257 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the process adopted in the matter of appointment of trustees to the Devasthanam of Sri Kandaswami temple in the City of Madras; and

(*b*) whether preference is shown to the community of Beri Chettier under a scheme framed by the High Court?